DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.118/2025
Prosecution Witness P.W.13

| | |
|---|---|
| Name : **திருமதி.ஜெயலட்சுமி** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

3–ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**நாள்: 23.02.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் கம்பம், பத்திரப்பதிவு அலுவலகத்தில் லைசென்ஸ் டாக்குமெண்ட் ரைட்டர். எனது லைசென்ஸ் என்னால் ஆஜர் செய்ய முடியும், அதை நான் நீதிமன்றத்தில் இன்று ஆஜர் செய்துள்ளேன் 2023 ஆம் ஆண்டு இது சம்பந்தமாக நான் லைசென்ஸ் பெற்று, பத்திர அலுவலகம் அருகில் எனது அலுவலகம் அமைந்துள்ளது இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் நான் பதிவு செய்யும் ஆவணங்கள் குறித்து முறையாக பதிவேடுகள் பராமரித்து வருகிறேன் .எனது லைசென்ஸ் நகல் அ.சா.ஆ.15.

2. எனக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரிகள் ஒன்று மற்றும் இரண்டு சதாம் உசேன் மற்றும் பிருந்தா தேவி இருவரையும் எனக்கு தெரியும் எனது அலுவலகத்திற்கு பத்திரம் எழுதுவதற்காக அவர்கள் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பத்திரம் பதிவு செய்வதற்காக அவர்கள் வந்தார்கள். முத்துக்குமரன் மற்றும் அவரது மனைவியான ரதி என்பவரும் எதிரிகள் இருவரையும் அழைத்து வந்தார்கள். பிருந்தா அவரது பூர்வீக சொத்து கம்பத்தில் அமைந்துள்ள சொத்து குறித்த ஆவணம் கொடுத்தார் அது குரங்கு மாயன்

தெருவில் அவரது பெற்றோர்கள் பெயரில் இருந்தது. அதை தான பத்திரம் ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள்.

3. பிருந்தாவின் சகோதரி ஈஸ்வரி என்பவர் தான பத்திரம் பிருந்தா பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். ஈஸ்வரியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும் அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை. அவரது புகைப்படம் காட்டினால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். என்னிடம் புகைப்படத்தில் காட்டக்கூடிய 3ம்-ம் எதிரி தான் என் முன்னிலையில் அன்றைய தினம் பிருந்தாவின் சகோதரி என ஆஜரானவர். பிருந்தாவின் பெற்றோர்கள் இறந்து விட்டதாக சொன்னார்கள்.

4. வாரிசு சான்றிதழ் வாங்கி பார்த்தோம். ஈஸ்வரி மற்றும் பிருந்தா ஆகியோர் வாரிசுகள் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு கொடுத்த பத்திரம் நகல் எதுவும் நான் வைத்திருக்கவில்லை. ஈஸ்வரி, பிருந்தா என்பவர் பெயருக்கு தானம் கொடுப்பதாக பத்திரம் எழுதி பதிவு செய்தோம் இரண்டு மூன்று வருடங்கள் ஆனதால் எனக்கு அந்த ஆவணத்தின் எண்ணோ, அந்த ஆவணத்தின் தேதியோ எனக்கு ஞாபகமில்லை.

5. பிருந்தாவிற்கு ஆதரவாக அந்த சொத்து சம்பந்தமாக சுமார் 4 – 5 மாதங்கள் கழித்து லோன் வேண்டுமென்று பிருந்தா மற்றும் ரதிப்பிரியா மற்றும் முத்துக்குமரன் என்னை அணுகினார்கள். அவ்வாறு அணுகும் பொழுது தனிநபர் கடன்கள் வழங்குவதற்காக தனியார் நிறுவனங்கள் நிறைய பேர் பத்திர அலுவலகத்தில் தயாராக இருப்பார்கள் அவ்வாறு 2-ம் எதிரி கடன் வேண்டும் என கேட்டதன் பேரில் சோழமண்டலம் நிதி நிறுவனத்தில் வந்த நபர்களிடம் பிருந்தா தேவியை அறிமுகம் செய்து வைத்தேன். அவர்களுக்கிடையே பேசி லோன் வந்தது. ரூ. 25 லட்சம் வந்தது.

6. அசல் பத்திரம் இருந்தால் மட்டுமே அடமானம் ஏற்படுத்த முடியும் என்ற காரணத்தினால் அதனை பார்த்து முடித்துக் கொடுங்கள் என நான் அவர்களிடம் சொன்னேன். முத்துக்குமரனிடம் அந்த பத்திரத்தை கொடுத்து இருந்ததாக

பிருந்தா தேவி சொன்னார். அந்த நாள் அந்த பத்திரம் திரும்பி கிடைக்காததால் சோழமண்டலம் நிதி நிறுவனத்தில் இருந்து தன்னால் கடன் வாங்க இயலவில்லை என்று சொன்னார். ரதிபிரியா மற்றும் முத்துக்குமரனிடம் தங்களிடம் பத்திரம் இருப்பதாக அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். கார்த்தி என்ற அ.சா.5 அவர் வீட்டில் நடந்த விசேஷத்தில் 15.11.2024 ஆம் தேதியன்று விக்னேஷ் என்ற ஒரு வழக்கறிஞர் வந்து எனக்கு போன் செய்து லோன் வந்தது உண்மை என்றால் தான் பேசிக் கொள்வதாக என்னிடம் நேரில் வந்து சொல்ல சொன்னார்.

7. கம்பம்மெட்டு காலனியில் ஒரு பத்திரம் தயார் செய்து கொண்டிருந்தேன். விக்னேஷ் என்னை அழைத்ததன் பேரில் கார்த்திக் என்பவரது இடத்திற்குச் சென்றேன். அங்கும் இறந்துபோன முத்துக்குமரன், நாகபாலன், பிருந்தாதேவி, நான், வழக்கறிஞர் விக்னேஷ், 1ம் எதிரி சதாம் உசேன் ஆகியோர் இருந்தோம். சதாம் உசேன் சற்று தள்ளி நின்று கொண்டிருந்தார். பிருந்தா இறந்து போன முத்துக்குமரனிடம் ரூ.20 லட்சம் திருப்பி செலுத்தி விடுவதாகும், கூட, குறையாக வந்தால் பார்த்துக் கொள்வதாக தெரிவித்தார். இதோட முடித்துக் கொள்ளுங்கள் என தெரிவித்தார். அதுவும் தான் படாத கடனுக்கு இதை கழிப்பதாக தெரிவித்தார்.

8. முத்துக்குமரன் மற்றும் நாகபாலன் ஆகியோர்கள் ரூ.41 லட்சத்திற்கு 20 லட்சம் ரூபாய் கொடுத்தால் ஒப்புக்கொள்ள முடியாது என தெரிவித்தார்கள். உடனே வழக்கறிஞர் தனக்கு நேரமில்லை என்றும், இன்னொரு நாள் வந்து பேசிக் கொள்வதாக சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார். வாங்காத கடன் அடைக்கிறேன் என்று முதல் எதிரி தனது கணவர் என்று அவருக்கு ஏற்பட்ட கடனை பிருந்தா தேவி ஏற்றுக்கொள்வதாக சொல்லி தான் இந்த பேச்சுவார்த்தை நடந்தது. உடனே நாங்கள் எல்லோரும் கிளம்பி சென்று விட்டோம். விண்ணப்பம் கொடுக்காமல் கடன் கொடுக்க மாட்டார்கள் என்றால் சரிதான். சோழமண்டலம் நிறுவனத்தைச் சார்ந்த லோன் மேனேஜர் ஈஸ்வரன் என்பவரிடம் நாங்கள் இது

சம்பந்தமான ஆவணங்களை கொடுத்தோம். பிருந்தா அந்த பத்திரத்தின் நகல்களை ஈஸ்வரன் என்ற மேலாளர் சோழமண்டலம் நிறுவனத்திடம் கொடுத்தார்.

**சாட்சி பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் பராமரித்து வரும் பதிவேடு எடுத்துவருவதாக சொன்னதன் பேரில் அவரது விசாரணையானது ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.23 19:24:41 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.